*33*

# "விதைப்பவன் உவமையைக் கேளுங்கள்"

## மத். 13:3–10, 18–23; மாற். 4:2–10, 13–20; லூக். 8:4–9, 11–15, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*நான் எவ்வளவு அதிக நேரம் பிரசங்கிக்கின்றேனோ, அவ்வளவுக்கு அதிகமாக, உரையைக் கேட்பவர்கள் எந்த ஒரு பிரசங்கத்தின் செயல் விளைவையும் மாபெரும் அளவில் தீர்மானிக்கின்றார்கள் என்று நான் அதிகமாய் நம்புகின்றேன். ஒரு இடத்தில் நான் ஒரு பிரசங்கத்தைப் பிரசங்கித்து, மக்கள் அதை மிகச் சிறந்தது என்று சொல்லியிருக்கலாம்; நான் அதே பிரசங்கத்தை இன்னொரு இடத்தில் பிரசங்கித்து, அதைக் கேட்டவர்களில் ஒரு சிலர் அதை இரண்டாந்தரமானது என்றோ அல்லது மோசமானது என்றோகூட சொல்லியிருக்கலாம். ஒரு இடத்தில் ஒரு பிரசங்கம் பல இருதயங்களைத் தொடலாம்; இன்னொரு இடத்தில் அதே பிரசங்கம் காணக்கூடிய பதில்செயல் எதையும் கொண்டிராமற்போகலாம். எனது எடுத்துரைப்பு ஓரளவுக்கு மாறும் என்பதை நான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றாலும், மக்கள் கூட்டத்தில்தான் பிரதானமான மாறுபாடு உள்ளதாகக் காணப்படுகிறது. ஒருமுறை இயேசு, சுவிசேஷத்தின் வெற்றியில் அதைக் கேட்பவர்கள் நிகழ்த்தும் பங்குப் பணி பற்றிய உவமை ஒன்றைப் போதித்தார்.[1]*

### உவமை

### *(மத். 13:3-9; மாற். 4:2-9; லூக். 8:4-8)*

இயேசு, "கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப் பட்டான்" என்று தொடங்கினார் (மத். 13:3ஆ).

**வழியருகான[2] நிலம்: கடினப்பட்டது**

"அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்தது" (மத். 13:4அ). அந்தக் காலத்தில் பலஸ்தீன நாட்டில் வயல்களுக்கு இடையில் வேலிகள் எதுவும் இருந்ததில்லை, வயல்களின் நடுவில் பாதைகள் அமைக்கப்பட்டு இருந்தன. இந்தப் பாதை வழிகள் அவற்றினூடே வயல்களுக்கு நடந்து செல்லும் பாதங்கள் பட்டுப்பட்டுக் கடினமாகியிருந்தன. விதையானது


இந்த மண்ணில் ஊடுருவிச் செல்ல முடியாது, எனவே அது மேற்பரப்பில் விழுந்து கிடக்கும். இதன் விளைவாக, ''அது மிதியுண்டது, ஆகாயத்துப் பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது" (லூக். 8:5ஆ).[3]



**பாறை நிலம்: ஆழமற்றது**

"சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தது" (மத். 13:5அ). அது கீழே பாறையும் மேலாக சற்று மண்மூடியிருந்ததுமான நிலமாக இருந்தது.[4] இப்படிப்பட்ட இடங்கள் மலைப்பகுதிகள் யாவற்றிலும் இருப்பது போலவே பலஸ்தீனத்தின் வயல்களில் சாதாரணமானவைகளாய் இருந்திருக்கும். இந்த நிலமானது வழியருகான நிலம் போலவே கடினமானது, ஆனால் நல்ல நிலம் போன்ற தோற்றம் கொண்டதாக இருந்தது.

விதையானது இவ்வகைப்பட்ட நிலத்தில் விழுந்தபோது, அது நிலத்தினுள் ஒரு குறுகிய ஆழத்திற்கு ஊடுருவிச் செல்ல முடிந்தது மற்றும் அது வளரத் தொடங்கிற்று. ஆயினும், நிலமானது செடிகள் ஆழத்தில் வேர்பிடிக்கக் கூடாத அளவுக்கு மிகவும் ஆழமற்றதாக இருந்தது. "மண் ஆழமாயிராததினாலே அது சீக்கிரமாய் முளைத்தது'' (வ. 5ஆ). ''... வெயில் ஏறின போதோ, தீய்ந்துபோய், வேரில்லாமையால் [''ஈரமில்லாததினால்''; லூக் 8:6], உலர்ந்து போயிற்று" என்பதே விளைவாயிற்று (மத். 13:6).




**முட்புதரான நிலம்: பிரிவுபட்டது**

"சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது" (மத். 13:7அ). இது நல்ல வளமான நிலமாக இருந்தது, ஆனால் ஏற்கனவே முட்கள் வளர்ந்திருந்த நிலமாக இருந்தது. மெக்கார்வீ அவர்கள், பலஸ்தீன நாட்டில் பதினாறு வகையான முட்செடிகள் இருந்தன என்றும் அவைகள் அடர்த்தியாக வளர்ந்துள்ள இடங்களில் அவைகளினூடே ஒரு மனிதர் குதிரையில் ஏறிக் கடந்துசெல்ல முடியாது என்றும் எழுதியுள்ளார்.[5]

இந்த நிலம் நல்ல நிலம் போன்ற தோற்றம் கொண்டிருக்கச் சாத்தியக் கூறு உள்ளது, ஏனென்றால் முட்செடிகளின் நுனிப்பகுதி வெட்டப் பட்டிருக்கலாம் - ஆனால் அவற்றின் வேர்கள் மேற்பரப்பிற்குக் கீழே எஞ்சியிருந்தன. நான் ஒரு சிறுபையனாக இருந்தபோது, எனது அப்பா என்னிடத்தில், தோட்டத்தில் சென்று களைபறிக்கும்படி கூறினார், சில வேளைகளில் நான் மேல்தரையிலிருந்து களைகளின் இலைகளை மாத்திரம் செதுக்கி எடுத்தேன் என்பதை உங்களுக்கு அறிவிக்கின்றேன். அவ்வாறு தோட்டமானது களைகள் பறிக்கப்பட்டதுபோல் காணப்படும், ஆனால் அந்த வேலை அதிக நாள் நிலைத்து இராது, மிகவும் விரைவிலேயே நான் தோட்டத்தில் மீண்டும் களை பறிக்க வேண்டும் என்பதே முடிவு விளைவாயிருந்தது!


இந்த நிலத்தில் விதை வளர முடிந்தது, அது ஒரு வேர்த் தொகுதியைக்

*கூட ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது, ஆனால் "முள் கூட வளர்ந்து" (லூக். 8:7). இதன் விளைவாக, "முள் வளர்ந்து அதை நெருக்கிப்போட்டது" (மத். 13:7ஆ). ஒருமுறை நான் இந்த சத்தியத்தை நெடுநாள் மறக்கப்பட்டுள்ள ஆதாரமூலத்திலிருந்து குறிப்பெடுத்தேன்: "நிலமானது ஒரு குறிப்பிட்ட அளவுக்கே தாவரங்களைத் தாங்க முடியும், உயிருடன் உள்ள ஒவ்வொரு களையும் தானியச் செடியின் இலையொன்றை மூச்சுத் திணற வைப்பதாகவே அர்த்தப்படுகிறது." பாறை நிலத்தில் ஏற்படுவது போன்று, முட் செடிகள் தாவரங்களைக் கொல்லுவதில்லை. தாவரங்கள் வளருகின்றன, ஆனால் அவைகளின் வளர்ச்சி தடைப்படுகிறது. அவைகள் கதிர் விடுகின்றன,[6] ஆனால் அந்த கதிர்கள் வெறுமையாக உள்ளன - எனவே அந்தத் தாவரங்கள் "பலன் கொடுக்கவில்லை" (மாற். 4:7).*



***நல்ல நிலம்: மென்மையானது, ஆழமானது மற்றும் சுத்தமானது***

*"சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்து" (மத். 13:8அ). இது நல்ல வளமிகுந்த நிலமாக, தயார் செய்விக்கப்பட்டு விதையை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருந்த நிலமாகும். இது மற்ற நிலங்களுக்கு எதிரிடையானதாக இருந்தது. வழியருகான நிலமானது கடினமானதாக இருந்தது, ஆனால் இந்த நிலம் மென்மையானதாக இருந்தது. பாறை நிலமானது ஆழமற்றதாக இருந்தது, ஆனால் இந்த நிலம் ஆழமானதாக இருந்தது. முட்புதரான நிலமானது களைகள் நிறைந்திருந்தது, ஆனால் இந்த நிலம் சுத்தமானதாக இருந்தது. இங்கு விதையானது எவ்வித இடையூறுமின்றி ஊடுருவி வளர முடிந்தது. இதன் விளைவு என்னவாக இருந்தது? இந்த நிலமானது, "சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது" (வ. 8ஆ).*



*இயேசு இந்த உவமையைக் கூறிய பின்பு, "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன்" என்று கூறினார் (வ. 9). அவர், இது கேட்டு மறப்பதற்கான கதையல்ல என்று வலியுறுத்தினார். இதன் அர்த்தத்தை புரிந்து உணரும்படி அவர் தமது உரையைக் கேட்டவர்களுக்கு அறைகூவல் விடுத்தார்.*

## ***நடைமுறைப் பயன்பாடு (மத். 13:10, 18-23; மாற். 4:10, 13-20; லூக். 8:9, 11-15)***

*இயேசுவின் சீஷர்கள் அவரிடத்தில் வந்து, அவர் உவமைகளில் பேசுவது ஏன் என்றும் (மத். 13:10) இந்த உவமை எதை அர்த்தப்படுத்திற்று என்றும்*

*கேட்டார்கள் (லூக். 8:9). பின்பு கிறிஸ்து இதை விளக்கப்படுத்தினார். அவர், "ஆகையால் விதைக்கிறவனைப் பற்றிய உவமையைக் கேளுங்கள்" என்று தொடங்கினார் (மத். 13:18).*

*நிலங்களைப் பற்றிய அவரது விளக்கத்தை நாம் பார்ப்பதற்கு முன்பு, விதை, விதைப்பவன் மற்றும் நிலம் ஆகியவற்றின் தனிச்சிறப்புக்களின்மீது சற்று கவனம் செலுத்துவோம். முதலாவது, விதையைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்: இயேசு, "அந்த உவமையின் கருத்தாவது: விதை தேவனுடைய வசனம்" என்று கூறினார் (லூக். 8:11). மீண்டும் அவர், "விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்" என்று கூறினார் (மாற். 4:14). விதை என்பது, "தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தாக" (1 பேது. 1:23) உள்ளது, மற்றும் விதைப்பவன் என்பவர் வசனத்தை விதைப்பவராக அல்லது பரப்புகின்றவராக இருக்கின்றார் - இவர் போதகர் அல்லது பிரசங்கியார் என்பவராக உள்ளார். பவுல் தமது பிரசங்கித்தல் பற்றிப் பேசியபோது, "நான் நட்டேன்" (1 கொரி. 3:6அ) என்று கூறினார். நிலம் என்பது எது? இது மனிதரின் இருதயம் அல்லது மனம் என்பதாக உள்ளது. மனதிற்கு வசனத்தை புரிந்து உணரக்கூடிய பக்குவம் இருக்கிறது. "வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடன் பலன் கொடுக்கிறவர்களை" (லூக். 8:15) இயேசு "நல்ல நிலம்" போன்றவர்கள் என்று விளக்கப்படுத்தினார்.*

*இவ்விடத்தில் உவமையின் வலிவார்ந்த கருத்து உள்ளது: விதைப்பவனும் விதையும் ஒவ்வொரு நிலவகையிலும் ஒன்று போலவே உள்ளார்கள்; நிலங்களில்தான் மாறுபாடு உள்ளது.[7] அவை ஒவ்வொன்றும் விதையை ஏற்றுக்கொள்வதற்கு மாறுபட்ட நிலைமையைப் பெற்றிருந்தன, எனவே ஒவ்வொரு விஷயத்திலும் விளைவு மாறுபட்டதாக இருந்தது. இந்த உவமை, நாம் ஒவ்வொருவரும் நம்மையே, "எனது இருதயத்தின் நிலைமை என்ன? நான் வசனத்தை எவ்வாறு ஏற்றுக்கொள்ளுகின்றேன்?" என்று கேட்டுக் கொள்ளக் காரணமாக வேண்டும்.*

*இப்போது நாம், மாறுபட்ட நான்கு வகையான இருதய நிலங்கள் பற்றி இயேசு அளித்த விளக்கத்தை கண்ணோக்குவோம்.*

### *வழியருகான நிலம்: கடினப்பட்ட இருதயம்*

*வழியருகான நிலம் என்பது கடினப்பட்ட இருதயத்தை - மாறுபட்ட நிலை அல்லது தப்பெண்ணத்தினால் மிதிக்கப்பட்டு "பாவத்தின் வஞ்சனையினால் கடினப்பட்ட" (எபி. 3:13) - இருதயத்தைக் குறிக்கிறது. நீங்கள் எப்போதாவது மக்களுக்குப் போதிக்க முயற்சி செய்து, பின்பு அநேகமாக சுவிசேஷத்தின்மீது ஆர்வமே இல்லாதவர்களைச் சந்தித்திருக்கலாம். இவ்வகையான நபரைப் பற்றிப் பவுல் 1 கொரிந்தியர் 2:14ல் பின்வருமாறு கூறினார்: "ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப் படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்." இவர்கள் "சத்தியத்தின் மீதுள்ள அன்பில்" (2 தெச. 2:10) குறைவுபடுகின்றார்கள்.*

*வசனமாகிய விதையானது இவர்களின் இருதயங்களில் ஊடுருவிச் செல்ல முடியாது.*

*இவ்விதமாக இயேசு, "ஒருவன் ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக் கொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன்" என்று கூறினார் (மத். 13:19). வழியருகில் இருந்து விதைகளைப் பறவைகள் பொறுக்கிக்கொண்டு செல்லுகிறதுபோலவே, பிசாசானவன், கடினமான இருதயம் கொண்ட மனிதனிடமிருந்து வசனத்தைப் பொறுக்கிச் செல்லுகின்றான். எவ்வாறு? மனதில் உடனடியாக ஆயிரக்கணக்கான மற்ற சிந்தனைகளை இட்டு நிரப்புதல் என்பது எளிய மற்றும் மிகப்பொதுவான வழிவகையாக உள்ளது. சாத்தான் ஏன் இதைச் செய்கின்றான்? "... அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்கு" (லூக். 8:12). விசுவாசம் தேவனுடைய வசனத்தினால் வருகிறது (ரோமர் 10:17), மற்றும் மக்கள் வசனத்தைக் கேட்டு விசுவாசிப்பதைப் பிசாசானவன் விரும்புவதில்லை. அவன் தன்னுடன் முடிந்த அளவுக்கு அதிகமான மக்கள் நரகத்தில் இருப்பதையே விரும்புகின்றான்.*

*இந்த வார்த்தைகளை வாசிக்கின்ற யாராவது இவ்வகையான இருதயத்தைக் கொண்டிருக்கச் சாத்தியமுள்ளதா? யாராவது வசனத்தை ஏற்றுக்கொள்வதற்கு எதிராகத் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்துவதற்குச் சாத்தியக்கூறு உள்ளதா? வேதாகமம், "இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்" என்று வேண்டுகோள் விடுக்கிறது (எபி. 4:7ஆ). மாறாக, "உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்" (யாக். 1:21). இதை நினைவில் வையுங்கள்: விதையை இழத்தல் என்றால் ஜீவனை இழத்தல் என்பதாகிறது ... ஏனெனில் ஆவிக்குரிய வாழ்வு விதையில்தான் உள்ளது!*

***பாறை நிலம்: ஆழமற்ற இருதயம்***

*பின்பு, பாறை நிலத்தின் அர்த்தத்தை இயேசு விளக்கப்படுத்தினார்: "கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக்கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்ளுகிறான்" (மத். 13:20). பாறை நிலம் என்பது ஆழமற்ற, மேலோட்டமான சிந்தைகொண்ட தனிநபர்களைச் சித்தரிக்கிறது. ஒருவேளை இவ்வகைப்பட்ட நபரை நீங்கள் சந்தித்திருக்கலாம்: இவர் சத்தியத்தைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்பவராகக் காணப்படுகின்றார். இவர் விரைவாக சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகின்றார், மற்றும் நாம் ஒவ்வொருவரும் மகிழ்ச்சியடைகின்றோம்: "இவர் இவ்வளவு குறுகிய காலத்தில் கிறிஸ்தவரானது ஆச்சரியமான விஷயமல்லவா!" பின்பு, அதே விரைவில் அவரது ஆர்வம் இறக்கிறது, நமது இருதயங்கள் உடைகின்றன. இந்த நபர், பூமியின் மண் ஆழமிராதபடியால் விரைவாக முளைத்து எழும்பிய செடிக்கு ஒப்பாக இருக்கின்றார். எந்தக் காரணத்தினாலோ, இந்தத் தனிநபர் சத்தியத்தில் வேர்கொண்டவராகவில்லை.[8] இவர் கிறிஸ்தவத்தின் உண்மையான*

*தனிச்சிறப்பை உய்த்துணரத் தவறியுள்ளார்.*

*இயேசுவின் விவரிப்புப்படி, இப்படிப்பட்ட தனிநபர், "தனக்குள்ளே வேரில்லாதவனாய், கொஞ்சக் காலமாத்திரம் நிலைத்திருப்பான்'' (மத். 13:21அ).* KJV*யானது, இவர் "கொஞ்சக் காலமாத்திரம் நிலைத்திருப்பார்'' என்று கூறுகிறது. இவர் முதல் வகை நிலத்தைக் காட்டிலும் சற்று மேன்மையான தோற்றம் ஒன்றை முன்னிறுத்துகின்றார், ஆனால் இவர் "முடிவு பரியந்தம்'' நிலைத்திருப்பதில்லை (மத். 10:22). எனவே இதன் முடிவு விளைவும் ஒன்றாகவே உள்ளது: "... வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான்'' (மத். 13:21). ஆழமில்லா மல் வேர்கொண்டுள்ள செடி சூரியனின் முன்னிலையில் உலர்ந்துபோவது போல், இந்தத் தனிநபரும் துன்பம் மற்றும் உபத்திரவத்தின் முன்னிலையில் வாடிப்போகின்றார். சூரியன், ஆழமாக வேர்கொண்டுள்ள செடிகளைப் பெலப்படுத்தி, ஆழமற்ற வேர்கொண்டுள்ள செடிகளை உலர்த்துவது போலவே, உபத்திரவமானது, கிறிஸ்துவுக்குள் ஆழமாக வேர்கொண்டுள்ள[9] கிறிஸ்தவர்களைப் பெலப்படுத்தி மேலோட்டமான சீஷனை உலர்த்துகிறது.[10]*

*உவமையில் திரும்பத்திரும்பக் கூறப்பட்ட ''உடனே'' என்ற வார்த்தையைக் கவனியுங்கள்: அவன் வசனத்தைக் கேட்டு, "உடனே'' அதை சந்தோஷத்தோடே ஏற்றுக்கொண்டான், ஆனால் வசனத்தோடே உபத்திர வமும் வந்ததைக் கண்ட ''உடனே'' இடறலடைந்தான். கிரீடத்திற்கு முன்னே சிலுவை வரவேண்டியதைக் கண்ட உடனே, சிலுவையைத் தவிர்ப்பதற்காக கிரீடத்தைத் துறந்தான்.*

*இது உங்களைப் பற்றி விவரிப்பதில்லை என்று நான் நம்புகின்றேன். நீங்கள் எவ்வளவு "ஆழமாக வேர்கொண்டு'' இருக்கின்றீர்கள் என்பதைக் காண்பதற்கு, நீங்கள் உபத்திரவத்தில் எப்படி பதில்செயல் செய்கின்றீர்கள் என்பதைக் காண்பது மிகச்சிறந்த வழிமுறைகளில் ஒன்றாக உள்ளது. இயேசுவைப் பின்பற்றுபவராக இருத்தல் என்பது கடினமாகின்ற வரையி லும், தேவனுக்குக் கீழ்ப்படியாதிருத்தல் என்பது அவருக்குக் கீழ்ப்படிந் திருத்தலைக் காட்டிலும் சுலபமாகும் வரையிலும், ஆழமற்ற கிறிஸ்தவர் பெரும்பாலும் பிற கிறிஸ்தவர்களை விட "ஆரோக்கியமானவராகவே'' காணப்படுகின்றார்:*

- *வேதாகமப் பாட வகுப்பிற்குச் செல்லுதலைக் காட்டிலும் படுக்கையில் இருத்தல் என்பது சுலபமானதாக இருக்கும் வரையிலும்.*
- *ஆராதனை ஊழியத்திற்குச் செல்லுதலைக் காட்டிலும் மீன்பிடிக்கச் செல்லுதல் சுலபமானதாக இருக்கும் வரையிலும்.*
- *சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளுவதைக்காட்டிலும் அமைதியாக இருத்தல் என்பது சுலபமானதாக இருக்கும் வரையிலும்.*
- *"உலகத்திற்கு வெளிச்சமாக'' இருப்பதைக்காட்டிலும் உலகத்துடன் ஒட்டிச் சென்றுவிடுதல் என்பது சுலபமானதாக இருக்கும் வரையிலும்.*
- *சத்தியத்திற்காக நிற்பதைக்காட்டிலும் தவறைக் கவனிக்காது செல்ல அனுமதித்தல் என்பது சுபலமானதாக இருக்கும் வரையிலும்.[11]*

*“வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் எழுகின்றபோது” உங்கள் பதில்செயல் என்னவாக உள்ளது? நீங்கள் ஆழமற்ற கிறிஸ்தவராக இருந்தால், நீங்கள் உங்கள் வாழ்வை மறுஅர்ப்பணம் செய்யவும் தேவனுடைய வசனத்தில் நீங்கள் ஆழமாய் வேரூன்றவும் வேண்டுமென்று நான் உங்களுக்காக ஜெபிக்கின்றேன்.*

***முட்புதரான நிலம்: பிரிவுபட்ட இருதயம்***[12]

*அடுத்ததாக நாம் முட்புதரான நிலத்திற்கு வருகின்றோம். இவ்வகையான நிலத்தைப் பற்றி இயேசு பின்வரும் விளக்கத்தைக் கொடுத்தார்: “முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக் கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான்” (மத். 13:22).*

*இது, என்னைப் பொறுத்தமட்டில், இந்த உவமையில் விவரிக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளிலேயே மிகவும் கவலைக்குரியதாக உள்ளது. நிலமானது வளமும் வண்டல் மண்வாகும் உள்ளதாகச் சித்தரிக்கப்பட்டிருப்பது போலவே, இந்த நபரும் அதிகமான வாக்குறுதியை காண்பிக்கின்றார். இவர் கடின இருதயம் கொண்டவரல்ல, அல்லது ஆழமற்றவருமல்ல; இவர் பண்பின் செழுமையும் ஆளுமைத் தன்மையின் ஆழமும் உடையவராக இருக்கின்றார். இவர் தேவனுக்கென்று கனிகொடுக்கும் பிள்ளையாக சாத்தியக்கூறுள்ளவராக இருக்கின்றார். துரதிர்ஷ்டவசமாக இவரது இருதயம் உலகப்பிரகாரமான “முள்ளுகளினால்” நிறைந்துள்ளது. நான் ஒரு சிறுபையனாக இருந்தபோது செய்த களையெடுக்கும் பணி போலவே, இவரும் அவைகள் மேலாகத் தெரியாதபடிக்கு “செதுக்கியிருக்கலாம்” ஆனால் உலகத்துடனான இவரது பிணைப்பு இன்னமும் இவரது இருதயத்தில் உள்ளது.*

*இந்தத் தனிநபர் கிறிஸ்தவராகும்போது, உண்மையான மனமாற்றத்திற்கான ஒவ்வொரு குறிப்பும் இருக்கிறது. ஆயினும், இவர் தமது இருதயத்தில் கிறிஸ்துவுக்கு முதலிடம் கொடுப்பதற்குப் பதிலாக (மத். 6:33), இவர் இந்த உலகத்தின் கவலைகளினால் நிறைந்தவராகக் காணப்படுகின்றார் (13:22), “ஐசுவரியத்தின் மயக்கமும்” (வ. 22), “பிரபஞ்சத்திற்குரிய … சிற்றின்பங்களினாலும்” (லூக். 8:14), “மற்றவைகளைப் பற்றி உண்டாகிற இச்சைகளும்” (மாற். 4:19) இவரது இருதயத்தில் நிறைந்து காணப்படுகிறது. நிலமும்கூட ஓரளவுக்கே அதிக தாவரத்தைத் தாங்க முடிகிறதுபோல, ஒருவரின் சுய விருப்பங்கள் நிறைந்த இருதயத்தின் நிலையும் மிகமோசமாகவே உள்ளது: “தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது” (மத். 6:24ஆ) - அல்லது தேவனுக்கும் இன்பத்திற்கும், அல்லது தேவனுக்கும் வேறு எதற்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது.*

*இவரது இருதயத்தின் இயல்பின் காரணமாக, வசனமானது இவரது இருதயத்திற்குள்ளாகவே நெருக்கப்படுகிறது. இது கொல்லப்படுவதோ அல்லது அழிக்கப்படுவதோ இல்லை, ஆனால் இது நெருக்கப்படுகிறது. முள்செடிகள் தங்கள் நடுவில் உள்ள பிறசெடிகளின் முளைப்புத் திறனை ஒடுக்குவது போல, இந்த மனிதரும் தமது ஆவிக்குரிய வைராக்கியத்தில்*

வடிந்துபோகின்றார். இவரது திறமைகளைக் கொண்டு இவர் ஒரு மாபெரும் கிறிஸ்தவராகியிருக்க முடியும், ஆனால் ஒரு மாபெரும் வர்த்தகராவது அல்லது ஒரு மாபெரும் அரசியல்வாதியாவது அல்லது வேறு எவ்வகையிலாவது ஒரு மாபெரும் நபராவது என்பதே இவரது ஒரே விருப்பமாக உள்ளது.

இவர் கர்த்தருக்கு ஊழியம் செய்வதில் பலனற்றவராகிறார் என்பதே விளைவாக உள்ளது. இந்தத் தனிநபர், ''நெருக்கப்பட்டு, பலன் கொடாதிருக்கிறார்கள்'' என்று கிறிஸ்து கூறினார் (லூக். 8:14). தானியச் செடியின் தானியமற்ற வெறுங்கதிரானது தானியம் உள்ளதைப் போன்று தோற்றம் அளிப்பதுபோலவே, இந்தத் தனிநபரும் கிறிஸ்தவத்தின் வெளித்தோற்ற வடிவங்களைக் காட்சிப்படுத்துகின்றார், ஆனால் உண்மையில் இவரது வாழ்வானது வெறுமையான கூடாக உள்ளது. இவர் கிறிஸ்துவுக்கென்று கனி கொடுப்பதில்லை.[13] முடிவில், இவர் உலகத்தை ஆதாயப்படுத்தியவராக, ஆனால் ஆத்துமாவை இழந்துபோனவராகத் தம்மைக் காண்பார் (மாற். 8:36).

மீண்டுமாக, இது சுயபரிசோதனைக்கான வேளையாக உள்ளது. நாம் நமது ஆவிக்குரிய வலிவுத் தன்மையைச் சேதப்படுத்தும்படிக்கு இந்தப் பிரச்சனைகளில் எதையாவது அனுமதித்துள்ளோமா?

(1) *உலக கலக்கங்களும் கவலைகளும்.* நம்மை நாம் கர்த்தருக்கென்று முழு இருதயத்தோடு அர்ப்பணித்தலில் இருந்து நம்மை விலக்குவதற்கு, அற்பமான விஷயங்களை அனுமதித்துள்ளோமா? உண்மையிலேயே ''தேவையான''தாக இருப்பதை (லூக். 10:41, 42) நாம் மறந்து போகுமளவுக்கு மார்த்தாளைப் போல நாம், ''அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டு'' கலங்குகின்றோமா (லூக். 10:41)?

(2) *வஞ்சனையான செல்வங்கள்.* செல்வங்களைச் சேர்த்தலே மிகவும் முக்கியமானது என்று நினைக்குமளவுக்கு செல்வங்கள் நம்மை வஞ்சிக்க அனுமதித்துள்ளோமா? நமக்கு சிறிதளவே தேவை - மற்றும் சற்று காலத்திற்கே நமக்கு இவை தேவை. ''முன்னேறிச் செல்லுதல்'' என்ற நமது பைத்தியக்காரத்தனமான அவசர கதியில், முக்கியமான விஷயங்களை நாம் ஒருக்காலும் மறந்து விடக்கூடாது.

(3) *இன்பங்களும் இச்சைகளும்.* உலகப்பிரகாரமான தன்மை என்பது நமது ஆவிக்குரிய வாழ்வை சேதப்படுத்தச் சாத்தியக்கூறு உள்ளதா? நமது இருதயங்களில் உலகம் தங்கியுள்ளதா? நாம் தேவனுக்கும் மனிதருக்கும் ஊழியம் செய்வதைக் காட்டிலும் அதிகமான நேரத்தையும் சக்தியையும் ''கேளிக்கை பெறுவதில்'' செலவிடுகின்றோமா?

பிரிவுபட்ட இருதயம் என்ற இந்த வகைப்பாட்டில் நம்மில் பலர் விழுந்து விடுகின்றோம். தேவனுக்குப் பயன்படுத்தக்கூடுவதற்கென்று நம்மிடத்தில் தாலந்துகளும் சாத்தியக்கூறுகளும் உள்ளன, ஆனால் நாம் அவர்மீது கொண்டுள்ள அன்பை மற்ற ஆர்வங்கள் சூழ்ந்துகொள்ளும்படி அனுமதிக்கின்றோம். நமது இருதயங்கள் கர்த்தரை நோக்கி நிலைத்திருக்கும் படி கவனித்துக் கொள்வோமாக. இயேசு, ''இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்'' என்று கூறினார் (மத். 5:8அ). பவுல், ''நீங்கள் கிறிஸ்துவுடனே கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது

*பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்'' என்று எழுதினார் (கொலோ. 3:1, 2).*

**நல்ல நிலம்: உண்மையும் நன்மையுமான இருதயம்**

*கடைசியாக நாம் "நல்ல நிலத்திற்கு'' வருகின்றோம், இதை இயேசு "உண்மையும் நன்மையுமான" இருதயங்கள் என்று அடையாளப்படுத்தினார் (லூக். 8:15). இவர்களின் இருதயங்கள் கடினமானதாகவோ, ஆழமற்றதாகவோ அல்லது பிரிவுபட்டதாகவோ இருப்பதில்லை. இவர்கள் "வசனத்தைக் கேட்டு அதை ஏற்றுக்கொள்ளுகின்றார்கள்'' (மாற். 4:20). இவர்கள் வசனத்தைப் "புரிந்துகொள்வதற்கு" அவசியமான முயற்சியை மேற்கொள்ளுகின்றார்கள் (மத். 13:23). இவர்கள் வசனத்தை பெற்றுக் கொண்டவுடன் "அதை உறுதியாய்ப் பற்றிக் கொள்ளுகின்றார்கள்'' (லூக். 8:15). இவர்கள் சங்கீதக்காரரால் பின்வருமாறு விவரிக்கப்பட்ட மனிதரைப் போல் இருக்கின்றார்கள்: இவர்கள் "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாய் இருக்கின்றார்கள்" (சங். 1:2).*

*இப்படிப்பட்ட இருதயத்தில், வசனமானது முளைத்து, வளர்ந்து, கடைசியில் கனியை உண்டாக்குகிறது. இயேசு, "நல்ல நிலத்தில் விதைக்கப் பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும், உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருவான்'' என்று கூறினார் (மத். 13:23). மாறுபட்ட நிலங்கள் மாறுபட்ட சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளன, எனவே விளைச்சலின் விகிதம் மாறுபடுகிறது, ஆனால் இவை யாவையும் - நூறு மடங்கு, அறுபது மடங்கு, முப்பது மடங்கு என்பவை யாவையும் - நல்ல விளைவாகவே உள்ளன. இங்கு கடைசியாக, விதைவிதைத்தலில் இருந்து விரும்பத்தக்க விளைவு உள்ளது: பக்குவமடைந்த ஒரு கிறிஸ்தவர் தமது வாழ்வில் ஆவிக்குரிய கனி தருகிறார்!*

*மீண்டும் ஒருமுறை, நாம் ஒவ்வொருவரும் நம்மையே கண்ணோக்கு வோம். ஒவ்வொருவரும், "நான் உண்மையும் நன்மையுமான இருதயத்தைக் கொண்டுள்ளேனா? நான் தேவனுடைய வசனத்தை ஆவலுடன் ஏற்றுக்கொள்கின்றேனா? நான் ஒவ்வொரு வழியிலும் அவருக்குக் கீழ்ப்படிய விருப்பம் கொண்டுள்ளேனா?" என்று கேட்டுக் கொள்வோம்.*

*"கனி பரிசோதனையை'' மேற்கொள்ளுதல் என்பது அந்தக் கேள்வி களுக்குப் பதில்தரும் ஒரு வழியாக உள்ளது. இயேசு, "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்'' என்று கூறினார் (மத். 7:16அ). நாம் நமது வாழ்வில் கனி கொடுத்துள்ளோமா? நமது வாழ்வில் கனிகளைக் காண்பதற்குத் தேவன் உரிமை நிறைவுடன் எதிர்பார்க்கப் போதுமான கால அளவுக்கு நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருந்துள்ளோமா?[14] கிறிஸ்து, "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்'' என்று கூறினார் (யோவா. 15:8). நாம் "தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி'' (ரோமர் 7:4) கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டுள்ளதாகப் பவுல் எழுதினார். அவர், "சகல வித நற்கிரியை களுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ள"*

வேண்டும் என்று நம்மிடத்தில் வேண்டுகோள் விடுத்தார் (கொலோ. 1:10).

"கனி கொடுத்தல்" என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? "கனி" என்ற வார்த்தையானது "விளைவு," பயன் என்பதை அர்த்தப்படுத்த முடியும்.[15] கர்த்தருக்கென்று "கனி கொடுத்தல்" என்பது, வசனமானது, நம் வாழ்வில் விரும்பத்தக்க விளைவைக் கொண்டுள்ளது என்றும், நாம் வாழ்கின்ற முறையில் மக்கள் வசனத்தின் நடைமுறை விளைவைக் காண முடியும் என்றும் அர்த்தப்படுகிறது. நமது நடத்தையானது இயேசுவின் பண்பைப் பிரதிபலிக்கையில் நாம் "கனி கொடுக்கின்றோம்." நாம் மக்களை மாபெரும் இரக்கத்துடன் நடத்துகையில், நாம் பிறருக்கு உதவுகையில் "கனி கொடுக்கின்றவர்களாய்" இருக்கின்றோம். ஆவிக்குரிய விஷயங்களின் மீதான நமது அன்பு நமது உண்மை நிறைந்த ஆராதனையிலும் பெருகுகின்ற ஊழியத்திலும் உறுதியானதாக வெளிப்படுகின்றபோது நாம் "கனி கொடுக்கின்றவர்களாய்" இருக்கின்றோம். நாம் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொண்டு மற்றவர்களைக் கர்த்தரிடத்தில் நெருக்கமாய்க்கொண்டு வந்து சேர்க்கையில் "கனி கொடுக்கின்றவர்களாய்" இருக்கின்றோம்.[16]

மீண்டுமாக நாம் கிறிஸ்துவின் வார்த்தைகளையே திரும்பக் கூறுகின்றோம்: "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன்" (மத். 13:9). இது புரிந்துகொள்ளுதலுக்கான ஒரு அழைப்பாகப் பணி செய்வது மட்டுமின்றி, இப்பாடத்தின் தொகுப்பாகவும் பணி செய்ய முடியும்: கிறிஸ்துவின் வசனத்தை கேட்டு ஏற்றுக்கொள்ளுங்கள், நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்!

## முடிவுரை

நீங்கள் கடந்த காலத்தில் வசனத்தை ஏற்று இருக்கின்றீர்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது, ஆனால் யாக்கோபுவால் பரிந்துரைக்கப்படும் பின்வரும் இருதயத்தின் எண்ணப்போக்குடன் நீங்கள் இப்பொழுது வசனத்தை ஏற்றுக்கொள்ளும்படி நான் உங்களை உற்சாகப் படுத்துகின்றேன்:

> ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள். அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் (யாக். 1:21, 22).

இங்கு, உங்களுக்குப் பழக்கப்பட்டதாகவோ அல்லது பழக்கப்படாததாகவோ உள்ள முக்கியமான சில வேத வசனப்பகுதிகள் தரப்படுகின்றன:

> "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற். 16:16).

> "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று

*இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2:38).*

*"இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (அப். 22:16).*

*"... மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" (வெளி. 2:10).*[17]


*நீங்கள் உண்மையும் நன்மையுமான இருதயத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக - அதாவது, நீங்கள் இவ்வசனப் பகுதிகளைக் கேள்விப்பட வேண்டும், இவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும், விளங்கிக் கொள்ள வேண்டும், கீழ்ப்படிய வேண்டும். பின்பு, இவைகளை உங்கள் இருதயங்களில் உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காக - நான் ஜெபிக்கின்றேன்!*

## குறிப்புகள்


*ஒரு கருத்தறிவில், இந்தப் பிரசங்கத்தின் செய்தி எளிமையானதாக உள்ளது; இன்னொரு கருத்தமைவில் இது ஆழ்ந்தறிவுடையதாக உள்ளது. நம் எல்லாருக்குமே அவ்வப்போது, விதைப்பவன் உவமையிலிருந்து சத்தியங்களை நினைவூட்ட வேண்டியது அவசியமாக உள்ளது.*

*நான் இந்தப் பிரசங்கத்தைப் பிரசங்கித்தபோது, நான் ஃபிளானல் போர்டு விவரிப்பைப் பயன்படுத்தினேன். பிரசங்கம் தொடங்குகையில் தலைப்பானது பலகையின் மேல்பகுதியிலும், விதைப்பவர் ஒருவருடைய படம் பலகையின் மையப்பகுதியிலும் இருக்கும். பலகையானது கருப்பு நிற நூல்கொண்டு நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும்.*

*நான் முதலில் உவமையை விவரித்து, இயேசுவால் கூறப்பட்ட கருத்துக்களை விவரிப்பதற்காக சிறு படத்துண்டுகளைப் பயன்படுத்தினேன். பிரசங்கம் வளருகையில் நான் சிறு படத்துண்டுகள் பலவற்றை பயன்படுத்தினேன். எடுத்துக்காட்டாக, கடினப்பட்ட இருதயம் பற்றிய சித்தரிப்பைப் பலகையில் பெயரிடுவதுடன் நான் தொடங்கினேன். பின்பு "நிலத்தின்மீது" நான் "விதையை" இட்டேன். கடைசியாக, அந்த விதையைக் கொத்திக் கொண்டுபோக தயாராக உள்ள ஒரு பறவையை சேர்த்தேன். இதே விதமான அணுகு முறையை நான் எல்லா நிலங்களுக்கும் பயன்படுத்தினேன்: மண் ஆழமாயிராத நிலத்தில் நான் முதலில் ஒரு சிறு செடியின் படத்தைப் பயன்படுத்தினேன்; பின்பு சூரியனின் படத்தை அதில் சேர்த்து, ஏற்கனவே இருந்த செடிக்குப் பதிலாக உலர்ந்த செடியின் படத்தைப் பயன்படுத்தினேன். பிற நிலங்களுக்கும் நான் இதே விஷயத்தைச் செய்தேன். பிரசங்கத்தில் உவமையைத் தருகிற பகுதியை நான் முடித்தபோது, ஃபிளானல் பலகையானது பின்வருமாறு காட்சியளித்தது:*




உவமையைப் பற்றிய இயேசுவின் விளக்கத்தை நான் கலந்துரையாடுகையில், நிலங்களின் கீழுள்ள பெயர்களை எடுத்துவிட்டு அவற்றிற்குப் பதிலாக தேவையான விவரிப்பு வார்த்தைகளைக் கூட்டினேன். பலகையின் கீழே சுயபரிசோதனையை ஊக்குவிக்கும் கேள்வியொன்றை வைத்தேன். கீழே உள்ள படமானது, பிரசங்கத்தின் முடிவில் ஃபிளானல் போர்டின் தோற்றத்தை விவரிக்கிறது:



*குறிப்புகள்*

*[1]இந்தப் பாடத்திற்கான எனது குறிப்பு, பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதப் பட்டது, எனவே இதற்கு நான் பயன்படுத்திய ஆதாரமூலங்கள் எல்லாவற்றையும் என்னால் நினைவுகூர இயலவில்லை. மெக்கார்வீ அவர்களின் Fourfold Gospel என்ற புத்தகம் பிரதான ஆதாரமூலமாக இருந்தது என்பது என் நினைவில் உள்ளது, மற்றும் நான், ஒரு ஃபிளானல்கிராப்* [flannelgraph] *பாக்கெட் எனக்கு நடைமுறைப் பயன்பாடு மற்றும் விவரித்தல் ஆகியவற்றிற்குக் கருத்துக்களை அளித்தது என்பதையும் நினைவுகூருகின்றேன். அதைத் தவிர, நான் யாருக்கு நன்றிகூற வேண்டும் என்பதை அறியாதிருக்கின்றேன். உரியவருக்கு உரிய வகையில் மதிப்பளிக்கத் தவறியிருந்தால் அதற்கு நான் மன்னிப்பை வேண்டுகின்றேன். [2]சில விதைகள் "வழியோரமாக" விழுந்தன என்று* KJV *கூறுகிறது. நீங்கள்* NASB*யின் சொற்றொடரில் நிலைத்திருக்க விரும்பினால், ''சாலையோரமாக'' என்ற வார்த்தையைப் பயன்படுத்த விரும்பலாம். [3]நீங்கள் பேசுகையில், நிலங்களின் மாறுபட்ட வகைகளின் விவரிப்புகளைக் காண்பிக்க விரும்பலாம். [4]இந்த நிலம் பல்வேறு அளவுள்ள பாறைகளால் நிறைந்திருந்தது என்று நினைக்க வேண்டாம், ஆனால் அதற்கு மாறாக இது ஒரு பாறை அடுக்கின்மீது, மெல்லியதான மண் அடுக்கு உடையதாக இருந்தது.* [5]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 330. *[6]நான் வாழும் இடத்தில், கோதுமைக் கதிர் அல்லது மக்காச்சோளக் கதிர் பற்றி நான் பேச முடியும். உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு நன்கு பழக்கப்பட்ட ஒரு சொற்றொடரை* [*உதாரணமாக, நமது நாட்டில் ''நெற்கதிர்'' என்று*] *பயன் படுத்துங்கள். [7]நிலமானது (இருதயம்) விதைப்பவரால் (போதகரால்) தயார் செய்விக்கப்பட்டு சுத்தமாய்க் காத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பது உண்மையே, ஆனாலும் இந்த உவமையில் நிலத்தின் (இருதயத்தின்) நிலை மட்டுமே கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. [8]கொலோசெயர் 1:23ஐ வாசிக்கவும். [9]கொலோசெயர் 2:7ஐ வாசிக்கவும். [10]இந்த வாக்கியம் மெக்கார்வி மற்றும் பென்ட்லெட்டன் ஆகியோரின் புத்தகத்தில் பக்கம் 334ல் இருந்து தழுவப்பட்டுள்ளது.*

*[11]எனது நடைமுறைப் பயன்பாடுகள் நான் வாழும் இடத்திற்குப் பொருந்துகின்றன. உங்கள் இடம் மற்றும் உரையைக் கேட்பவர்களுக்குத் தக்காற்போன்று இவற்றைத் தழுவியமைத்துக் கொள்ளுங்கள். [12]''திசை திருப்பப்பட்ட இருதயம்'' என்ற இன்னொரு சொற்றொடரும் பயன் படுத்தப்படக்கூடும். [13]கர்த்தருக்கென்று ''கனி கொடுத்தல்'' என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்று நீங்கள் விளக்கம் தர வேண்டியது அவசியமாயிருக்கும். இது இப்பாடத்தின் முடிவுப் பகுதிக்கு அண்மையில் சுருக்கமாகக் கலந்துரையாடப்படுகிறது. [14]உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கப்பட்ட தாவரங்களைப் பயன்படுத்தி இந்தச் சிந்தனையை நீங்கள் விவரிக்க விரும்பலாம். என்னிடத்தில் நன்கு வளர்ந்த ஏழு பெக்கான் மரங்களும், இரண்டு இளம் மரங்களும் உள்ளன. அவ்விரண்டு மரங்களில் இருந்து உடனடியாக நான் பெக்கானை எதிர்பார்க்கவில்லை, ஆனால் இந்த ஆண்டு சில கனிகளைக் காண்பதற்கான காலமாயிற்று. ஒரு சில பருவகாலங்கள் கடந்து சென்று, கனி எதுவும் கிடைக்காதிருந்தால், அவைகள் வெட்டி வீழ்த்தப்படும். (இந்த ஆண்டு முதன்முறையாக அவற்றில் சில பெக்கான்கள் இருந்தன, எனவே அவைகள் பாதுகாப்பாக உள்ளன.)* [*பெக்கான் என்ற மரம் நம் நாட்டில் இல்லாதது. எனவே அதற்குப் பதிலாக பப்பாளி மரம் என்ற உதாரணத்தைப் பயன்படுத்தலாம். பப்பாளி மரத்தில் ஆண்மரங்கள் கனி தருவதில்லை, எனவே பொதுவாக அவற்றை அதிகம்*

*வைத்துக்கொள்ள மக்கள் விரும்புவதில்லை.*] [15]*American Heritage Dictionary,* 4th ed. (2001), s.v. “fruit.” [16]*இந்தப் பத்தியை நீங்கள் வாழும் இடத்திற்குப் பொருத்தமான வகையில் தழுவி விரிவாக்கிக் கொள்ளுங்கள்.* [17]*உங்கள் உரையைக் கேட்பவர்களைப் பொறுத்து, தவறு செய்கின்ற கிறிஸ்தவர் எவ்வாறு மீளக்கட்டி எழுப்பப்படக்கூடும் என்பதற்கான வசனப்பகுதிகளையும் (அப். 8:22; யாக். 5:16; 1 யோவா. 1:9) நீங்கள் உள்ளடக்கலாம்.*